## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

நில அளவை – நத்தம், மலைக்கிராமங்கள், நகர அளவை – வருவாய் பின்தொடர்பணி – பதிவேடுகள் சீராக பேணுதல் திட்டம் – மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டம் – சிறப்பு திட்டங்கள் – அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் அறநிலையத்துறை

**அரசாணை (நிலை) எண்.1177** — **நாள் 30 அக்டோபர் 1987**
**13 ஐப்பசி, பிரபவ**
**திருவள்ளுவராண்டு 2018.**

**பார்வை:–**

1. அரசாணை எண்.869, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 30.9.1985.
2. அரசாணை எண்.824, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 12.8.1986.
3. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண்.53173/84, நாள் 24.1.1987.
4. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண்.53173/84, நாள் 28.7.1987.
5. அரசாணை (நிலை) எண்.805, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 15.7.1987.

*******

**ஆணை:**

நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையில் நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் 1982 முதல் ஒரு கடு விரைவு திட்டமாக மாற்றப்பட்டு மேற்படி திட்டப்பணிகள் 30.9.1987–இல் முடிவுக்கு வந்துள்ளன. இத்திட்டப்பணியில் முறையான பணித்தொகுப்பில் உள்ள பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களும் சேர்ந்து பல்வேறு இனங்களில் தற்போது 7309 பணியாளர்களும் தினக்கூலி அடிப்படையில் சுமார் 2384 பிரிவு எழுத்தர்களும் பணிபுரிகின்றனர். மேற்கண்ட முறையான மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களின் பணியினை 31.3.1988 முடிய நீட்சி அளித்து பார்வை ஐந்தில் குறித்த அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளன. நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்டம் 30.9.1987 அன்று முடிவுற்ற நிலையில், நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் (1) நத்தம் அளவை (2) மலைக்கிராமங்கள் அளவை (3) நகர அளவை (4) நகர ஆவணங்கள் பராமரிப்பு (5) நகர்ப்புற வரி பதிவேடுகள் பராமரிப்பு (6) மறு அளவை செய்த கிராமங்களில் மக்கள் குறை தீர்க்கும் நாள்

//த.பி.பா//

திட்டம் நடத்துதல் (7) 100 வட்டங்களில் பதிவேடுகள் சீரமைத்தல் (8) வருவாய் பின்தொடர்ப் பணியினை முடுக்கி விடுதல் மற்றும் (9) சைதாப்பேட்டை வட்டத்தில் 19 கிராமங்களில் அளவை செய்தல் ஆகிய சிறப்பு திட்டங்களை மேற்கூறிய பணியாளர்களை ஈடுபடுத்தி செயற்படுத்தலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் சமர்ப்பித்துள்ள பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசாணை (நிலை) எண்.1046, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 14.10.1986-இல் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கிணங்க செயற்படுத்தப்பட்ட நத்தம் அளவை முன்னோடி திட்டத்தினை, மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் செயலரின் தலைமையில் அரசால் நியமிக்கப்பட்ட கணிப்பாய்வுக்குழு அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு ஆழ்ந்து ஆய்வு செய்தது.

2. ஏற்கனவே, நில உடமை பதிவு மேம்பாட்டுத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட இவ்வாணையின் இணைப்பு-1-இல் குறித்த பணியாளர்களைக் கொண்டு பின்வரும் 6 திட்டங்களை 1.11.1987 முதல் செயற்படுத்தப்பட அரசு ஆணையிடுகிறது. ஏற்கனவே பார்வை ஐந்தில் கண்டுள்ள அரசு ஆணைக்கு சற்று மாற்றமாக இவ்வாணையின் இணைப்பு-I-இல் கண்ட பதவிகளை 1.11,1987-லிருந்து ஓர் ஆண்டுவரையோ அல்லது அவைகள் எவ்வளவு காலம் தேவைப்படுகிறதோ இவைகளில் எது முன்னதோ அதுவரை தற்காலிகமாக ஏற்படுத்த அரசு அனுமதி வழங்குகிறது. இப்பணிப் பதவிகளில் பணி செய்யும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தற்போது அரசு ஆணைகளின்படி அனுமதிக்கப்படும் இதர படிகளைப் பெற அருகதை பெற்றவர்களாவர்.

1) நத்தம் அளவை மற்றும் வேளாண்மைக்கல்லாத பிற பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை நிலங்களை அளவிடுதல்.

2) இவ்வாணையின் இணைப்பு-II-இல் விவரிக்கப்பட்டுள்ள மலைக்கிராமங்கள் அளவை செய்தல்.

3) ஏற்கனவே மறு அளவை செய்யப்பட்டுள்ள பின்வரும் 15 வட்டங்களில் மக்கள் குறை தீர்க்கும் நாள் திட்டம் நடத்துதல்.

1. கடலூர்
2. பன்ருட்டி
3. திண்டிவனம்
4. வானூர்
5. ஈரோடு
6. கோபிசெட்டிபாளையம்
7. பவானி
8. சத்தியமங்கலம்
9. பெருந்துறை
10. அகஸ்தீஸ்வரம்
11. தோவாலை
12. கல்குளம்
13. விளவன்கோடு
14. செங்கோட்டை
15. கொடைக்கானல்

//க.பி.பா//

4) முதற்கட்ட நில அளவை பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணிகள் முடிக்கப்பட்ட 100 வட்டங்களில் பதிவேடுகள் சீராக பராமரித்தல்.

5) நகராட்சிகள் (முன்னர் இருந்த சென்னை நகரம் தவிர்த்து மற்ற நகரங்கள் மற்றும் எல்லா மாநகராட்சிகளிலும் அளவை செய்தல்.

6) மறு அளவை செய்யப்பட்ட பகுதிகளில் வருவாய் பின்தொடர்ப் பணியினை முடுக்கி விடுதல்.

3. மேலே பத்தி 2-இல் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்கள் 1.11.1987 முதல் உடனடியாக மேற்கொள்ளப்பட தொடர் நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறும் அச்சிறப்பு திட்டப்பணிகளுக்கு இனம் வாரியாக குறியீடுகள் நிர்ணயம் செய்ய தேவையான செயற் குறிப்புகளை அரசுக்கு அனுப்புமாறும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கோரப்படுகிறார்.

4. மேலே பத்தி 2-இல் கூறப்பட்டுள்ள செலவினம்,
"2029 - 00 - நிலவரி - 102 - நில அளவை, நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் - ஏழாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II - மாநிலத் திட்டம் - JB - நத்தம், மலைக்கிராமங்கள் மற்றும் நகர நில அளவை (D.P.Code No.2029-00-102 JB 0006)" என்ற தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4-இல் கூறிய கணக்குத் தலைப்பு குறியீட்டு எண்ணுடன் மதிப்பீடு செய்தல், கணக்குகளை ஒப்பிட்டுச் சரிபார்த்தல் மற்றும் ஏனைய முழுப்பொறுப்பும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையையே சாரும்.

6. இச்செலவினம் புதுப்பணியைச் சேர்ந்ததாகும், சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும். ஒப்புதல் பெறுவதற்கு முன் உடனடியாகத் தேவைப்படும் செலவை எதிர்பாரா நிதியிலிருந்து (Contingency Fund) முன் பணமாக பெற்று செலவு செய்யப்பட வேண்டும். நில நிர்வாக ஆணையர் குறிப்பிடப்பட்ட நமுனாவில் (Prescribed application form) அரசு நிதித்துறையின் (வ.செ.பொ.1) பிரிவிற்கு இது குறித்து மனு செய்யுமாறு கோரப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.56/DS(KP) 87 மற்றும் 1464/JS(N)/87, நாள் 29.10.1987-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுகவனேஷ்வர்,
ஆணையர் மற்றும் செயலாளர்.

பெறுநர்:
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சென்னை - 600 005.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை - 600 005.
இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை, சென்னை - 600 005.
கூடுதல் இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் பிரிவு,
சென்னை - 600 005.

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்.
இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை – 600 005.
இயக்குநர், நகராட்சிகள் நிர்வாகம், சென்னை – 600 005.
இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை – 600 104.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 035.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை – 600 035.
தலைமை வனக் காவலர், சென்னை – 600 006.
தனி அலுவலர், மாநகராட்சி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர்.

**நகல்:**
வருவாய்/வனம் மற்றும் மீன்வளத்துறை/சமூக நலத் (TD) துறை, ஊரக வளர்ச்சி/
மாநகராட்சி மற்றும் குடிநீர் வாரியம்/நிதி/பணியாளர் மற்றும்
நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு/உபரி. நிதி (வ.செ.பொ.1) துறை, சென்னை – 600 009.

உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது

//உண்மை நகல்//

26/5/2023

பிரிவு அலுவலர்.

26/5/23

ஜே.ச.30.10

2175

415

## அட்டவணை-I

**1.11.1987 முதல் பல்வேறு சிறப்புத் திட்டங்களில் ஈடுபடுத்தப்படும் நில உடைமை பதிவு மேம்பாட்டுத்திட்டப் பணியாளர்கள் பற்றிய விபரம்.**

| வரிசை எண் (1) | இனம் (2) | எண்ணிக்கை (3) | ஊதிய விகிதம் (4) |
|---|---|---|---|
| 1. | நில அளவை பதிவேடுகள் உதவி இயக்குநர் | 3 (மூன்று) | ரூ.1340-75-1715-90-2435. |
| 2. | நில அளவை கூடுதல் இயக்குநரின் நேர்முக உதவியாளர் | 1 (ஒன்று) | ரூ.1340-75-1715-90-2435. |
| 3. | தனி வட்டாட்சியர் | 78 (எழுபத்தி எட்டு) | ரூ.1160-50-1460-70-1950. |
| 4. | மேலாளர் (தொழில் நுட்பம்) | 3 (மூன்று) | ரூ.1045-45-1450-65-1775. |
| 5. | நில அளவை ஆய்வாளர் | 80 (எண்பது) | ரூ.1045-45-1450-65-1775. |
| 6. | கண்காணிப்பாளர் | 13 (பதின்மூன்று) | ரூ.905-45-1445-50-1545. |
| 7. | நில அளவை துணை ஆய்வாளர் | 190 (நூற்றி தொண்ணூறு) | ரூ.905-45-1445-50-1545. |
| 8. | தலைமை வரைவாளர் | 108 (நூற்றி எட்டு) | ரூ.905-45-1445-50-1545. |
| 9. | நில அளவை சார் ஆய்வாளர் | 480 (நானூற்றி எண்பது) | ரூ.780-35-1025-40-1385. |
| 10. | முதநிலை வரைவாளர் | 376 (முன்னூற்றி எழுபத்தி ஆறு) | ரூ.780-35-1025-40-1385. |
| 11. | உதவியாளர் | 351 (முன்னூற்றி ஐம்பத்து ஒன்று) | ரூ.705-20-745-25-845-35-1230. |
| 12. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 28 (இருபத்தி எட்டு) | ரூ.610-20-730-25-955-30-1075 சிறப்பு ஊதியம். |
| 13. | ஜீப்பு ஓட்டுநர் | 11 (பதினொன்று) | ரூ.610-20-730-25-955-30-1075. |

..2..

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 14. | அலுவலக உதவியாளர் | 56 (ஐம்பத்தி ஆறு) | ரூ. 450—10—570—15—720. | |
| 15. | இளநிலை உதவியாளர் | 278 (இருநூற்றி எழுபத்தி எட்டு) | ரூ. 500/— தொகுப்பூதியம் | |
| 16. | தட்டச்சர் | 92 (தொண்ணூற்றி இரண்டு) | ரூ. 500/— தொகுப்பூதியம். சிறப்பூதியம் | |
| 17. | நில அளவர்/வரைவாளர் | 3686 (மூவாயிரத்து அறுநூற்றி எண்பத்தி ஆறு) | ரூ. 500/— தொகுப்பூதியம் | |
| 18. | ஈப்பு ஓட்டுநர் | 14 (பதினான்கு) | ரூ. 450/— தொகுப்பூதியம். | |
| 19. | பதிவுரு எழுத்தர் | 108 (நூற்றி எட்டு) | ரூ. 400/— தொகுப்பூதியம் | |
| 20. | பதிவுரு எழுத்தர் (ஜெராக்ஸ்) | 24 (இருபத்தி நான்கு) | ரூ. 400/— தொகுப்பூதியம் | |
| 21. | அலுவலக உதவியாளர் | 243 (இருநூற்றி நாற்பத்தி மூன்று) | ரூ. 350/— தொகுப்பூதியம். | |
| 22. | புல உதவியாளர் | 792 (எழுநூற்றி தொண்ணூற்றி இரண்டு) | ரூ. 350/— தொகுப்பூதியம். | |
| 23. | இரவுக்காவலர் | 119 (நூற்றி பத்தொன்பது) | ரூ. 300/— தொகுப்பூதியம் | |
| | மொத்தம் | 7134 | | |

மேற்கண்ட பணியாளர்களுடன் தினக்கூலி அடிப்படையில் 2025 பிரிவு எழுத்தர்களும் திட்டப் பணிகளில் ஈடுபடுத்த அனுமதிக்கப்படுகிறது.

சுகவனேஷ்வர்,
ஆணையர் மற்றும் செயலாளர்

//உண்மை நகல்//

-411-

/7/ (213)

இணைப்பு-2

மறுநில அளவை பங்கு எடுத்துக் கொள்ளப்படும் மலைக் கிராமங்கள் விவரம்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டத்தின் பெயர் | மலை மற்றும் கிராமங்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. |
| 1. | வட ஆற்காடு | வேலூர் | ஜவ்வாது மலை |
| | | | 1. ஆதிருப்பம் |
| | | | 2. மேலரசம்பட்டு |
| | | | 3. புது குப்பம் |
| | | வாணியம்பாடி | 4. வாணியம்பாடி |
| | | | 5. பீம குப்பம் |
| | | போளூர் | 6. நம்மன் நாடு |
| | | | 7. எரயூர் |
| | | | 8. வீரப்பனூர் குருப் |
| | | | 9. குட்டக்கரை |
| | | | 10. பட்டாறைக் காடு |
| | | | 11. மேல்சிட்கிளி |
| | | | 12. ஆதாரமங்களம் |
| | | | 13. எண்ட பாறை |
| | | | 14. புதுப்பேட்டை |
| | | | 15. காவமலை |
| | | | 16. அமிர்தி |
| | | | 17. கமர்வயூர் |
| | | | 18. செங்காடு |
| | | | 19. புலியூர்குப்பம் |
| | | | 20. எருமையனூர் |
| | | | 21. கீழ்தட்டிப்பட்டு |
| | | திருப்பத்தூர் | 22. புதூர்நாடு |
| | | | 23. பங்கம்பட்டு நாடு |
| | | | 24. நெல்லிவாசல் நாடு |
| | | செங்கம் | 25. பாலமருதூர் |
| | | | 26. வண்ணார்குட்டை |
| | | | 27. படபஞ்சிமருதூர் |
| | | | 28. மேல்தட்டிபட்டு |
| | | | 29. [illegible] |

..8..

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | | 29. மேல்சிலம்பாடி |
| | | | 30. புலியூர் |
| | | | 31. கீழ்வெட்டிபட்டி |
| | | | 32. நெல்லிவாசல் |
| | | | 33. எரக்கம்பட்டு |
| | | | 34. ஆதிபட்டு |
| | | | 35. பெருமுட்டம் |
| | | | 36. கீழ்பட்டு |
| | | | 37. சின்ன கீழ்பட்டு |
| | | | 38. மேல்பட்டு |
| | | | <u>ஏலகிரி மலை</u> |
| | | திருப்பத்தூர் | 39. மந்தளவாடி |
| | | | 40. சிங்காரியக்பதி |
| | | | 41. பொன்னேரி |
| | | | 42. சக்கரக்குப்பம்பட்டு |
| | | | 43. கருப்பனூர் |
| | | | 44. பாலனக்குப்பம் |
| | | | 45. வெங்காயபட்டி |
| | | | 46. அன்னாண்டபட்டி |
| | | | 47. ஜோலார் பேட்டை |
| | | | 48. எடயாம்பட்டி |
| | | | 49. காட்டேரி |
| | | | 50. வக்காணம்பட்டி |
| | | | 51. ஏலகிரி |
| | | | <u>கொல்லிமலை</u> |
| 2. | சேலம் | நாமக்கல் | 52. வளப்பூர் நாடு |
| | | | 53. குண்டூர் நாடு |
| | | | 54. அரியூர் நாடு |
| | | | 55. வள வந்தி நாடு |
| | | | 56. சேலூர் நாடு |
| | | | 57. திண்ணனூர் நாடு |
| | | | 58. தேவனூர் நாடு |

..9..

- 419 -



| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | இராசிபுரம் | 59. கீழூர் |
| | | | 60. மேலூர் |
| | | | 61. கீதமலை |
| | | | 62. பேர்க்கரை நாடு |
| | | | 63. பெயில் நாடு |
| | | | 64. எடபட்டி நாடு |
| | | | 65. சித்தூர் நாடு |
| | | | 66. திருப்புலி நாடு |
| | | | 67. பேலப்பாடி நாடு |
| | | | 68. ஆலத்தூர் நாடு |
| | | | 69. குண்டிமி நாடு |
| | | | <u>அறுநூத்து மலை</u> |
| | | சேலம் | 70. பெலபாடி |
| | | | 71. அறுநூத்து மலை |
| | | | 72. சிறுமலை |
| | | | 73. பள்ளிக்காடு |
| | | | 74. ஆலடிபட்டி |
| | | | 75. பெருவேலம்பட்டி |
| | | | 76. சிறுவேலம்பட்டி |
| | | ஆத்தூர் | 77. வேப்பாடி |
| 3. | திருச்சிராப்பள்ளி | துறையூர் | <u>பச்சை மலை</u> |
| | | | 78. வேநாடு |
| | | | 79. கோம்பை |
| | | | 80. தேன்பரநாடு |
| | | | <u>வால்பாறை</u> |
| 4. | கோயமுத்தூர் | வால்பாறை | 81. வால்பாறை |

சுகவனேசுவர்,
ஆணையர் மற்றும் செயலாளர்

//உண்மை நகல்//

26/5/2023

பிரிவு அலுவலர்